நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.849/2025

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜெகதீஷ்வரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனிசாமி |
| கிராமம் | : | அம்மாபேட்டை |
| வட்டம் | : | அந்தியூர் |
| மாவட்டம் | : | ஈரோடு |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 56 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,மே மாதம், 11–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.20 PM

1. நான் தற்போது அம்மாப்பேட்டையில் குடியிருந்து பேருந்து நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆஜர் எதிரி ஓட்டுநராக பணிபுரியும் TN 33 N 3308 மேட்டுரில் இருந்து அந்தியூர் செல்லும் அரசு பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.02.2025 ம் தேதி அந்தியூரில் இருந்து மேட்டுர் பேருந்து

நிலையம் உள்ளே நுழையும்போது பேருந்துநிலைய நேரகாப்பாளர் அலுவலகத்தில் கையெழுத்து வாங்குவதற்காக நான் நுழைவாயிலேயே இறங்கிவிட்டேன்.

2. நான் கையெழுத்து வாங்கிவிட்டு பேருந்து நிற்கும் இடத்திற்கு சென்றபோது பேருந்து விபத்துக்குள்ளானாதாக சொன்னார்கள். நான் பணிபுரியும் பேருந்து திரும்பும்போது பேருந்தின் முன்இடதுப்பக்க சக்கரத்தில் ஒரு பெரியவர் அடிப்பட்டுவிட்டதாகவும் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாகவும் தகவல் சொன்னார்கள். அடிப்பட்ட நபரையும் நான் பார்க்கவில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் பேருந்து நிலையத்தில் வைத்து விபத்து நடந்தன்று விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும்போது மேற்படி விபத்து நடந்த நேரத்தில் நான் சம்பவயிடத்தில் இல்லை என்றுதான் சொன்னேன். என்னை விசாரிக்கும்போது வேறு யாரை போலீசார் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.28 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**